மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# குறுந்தொகை காட்டும் இல்லறவாழ்வில் பொருளாதாரம்

ர. ஜெகன்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை

பண்டைய காலம் முதல் இக்காலம் வரை மனித வாழ்வின் இன்றியமையாத் தேவையாக பொருள் உள்ளது. பொருளில்லையேல் வாழ்க்கை சிறப்புறாது என்று சொல்லலாம். தமிழரின் பண்பாட்டில் பொருள் தேடும் கடமை ஆண்களையே சாரும். சங்க காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் ஆடவர்களே குடும்பத்தினைக் காக்கும் தலைமைப் பொறுப்பைப் பெற்றிருந்தனர். இறுதிவரையில் குடும்பத்தினைக் காக்கும் கட்டுப்பாடுடைய தலைவன், காதல் வாழ்வில் விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்வதற்கும்,திருமணம் செய்து கொண்ட பின் கற்பு வாழ்வின் போது நல்வாழ்வு வாழவும் பொருள் தேடிச் செல்கிறான். அத்தகைய வாழ்விற்கு அறம், பொருள், இன்பம், மூன்றும் இன்றியமையாதத் தேவை என்பதனை,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை" (தொல்.கள.நூ.1)

என்ற நூற்பா சுட்டுகிறது. அதாவது வாழ்வின் உறுதிப் பொருட்களில் பொருளையும் சுட்டியிருப்பதைக் காணலாம்.

## பொருளின் இன்றியமையாமை

பொருள் ஆதாரம் பொருளாதாரம். அன்புடன் அமைக்கப்படும் மனிதனின் இல்வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைவது பொருளேயாகும். தலைமக்கள் தங்களின் அன்பு மறுமைக்கும் நீடிக்க எண்ணினர். பிறப்பென்னும் பேதமையை அகற்றலுக்கு பொருள் ஈட்டல் இன்றியமையாத ஒன்று என்பதை,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு" (குறள் - 358)

என்ற குறளின் வழி வள்ளுவப் பெருந்தகை சுட்டிக்காட்டியுள்ளதை அறியலாம்.

**அறநெறியோடு பொருள் தேடல்**

பொருளினால் வாழ்க்கை நடத்த விரும்பும் தலைவன் தன் நாட்டையும் உடைமையையும் விட்டு வேற்று நாட்டிற்குச் சென்று பொருள் தேடுதலும் உண்டு. அவ்வாறு பிரியும்போது தலைவன் தலைவியை உடன் அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை. இவ்வாறு உயர்ந்தோர்கள் பொருள் தேடும் முறையில் ஒரு நெறி இருக்கும் என்பதை,

"பொருள் வயின் பிரிதலும் அவர் வயின் உரித்தே
உயர்ந்தோர் பொருள் வயின் ஒழுக்கத்தான்" (தொல்.நூ.979)

என்று தொல்காப்பியர் தனது நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

**ஈட்டிய பொருளைச் செலவிடும் முறை**

இல்லறக் கடமைகளில் ஒன்றாகிய விருந்தோம்பல் பண்பிற்கு வலு சேர்க்கும் வகையில் விருந்து செய்வதன் பொருட்டு பொருளைப் பயன்படுத்துவதை,

"விருந்து புறந்தருதலும் சுற்றமும் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்" (தொல்.கற்பு.நூ.11)

என்ற நூற்பாவின் படி பொருளே அடிப்படையாகின்றது. இல்லறத் தலைவன் பொருள் ஈட்டி அதற்கு அரசுக்கு திறைசெலுத்தித் தன் குடும்பத்தை நடத்துவதோடு அறவோர், விருந்தினர், உறவினர் ஆகிய மூவருக்கும் தன் கடமையைச் செய்தல் வேண்டும்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைமூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (குறள் - 41)

என்ற குறளில் வள்ளுவர் தலைவன் தன்அறிய முயற்சியால் அறவழியில் பொருள் ஈட்டியதோடு வாழ்விற்கு வசந்தம் சேர்க்கும் பொருட்டு,ஈட்டிய பொருளை நல்ல முறையில் பகுத்து பயன்படுத்துவதால் மறுமையிலும் இன்பங்களைப் பெற்று வாழ முடியும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

**பொருள் வயின் பிரிவு**

தலைவனும் தலைவியும் இணைபிரியாது அன்போடு இருக்கும் வேளையில் புறக் கடமை ஆற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த தலைவன் தன் மனைவியைப் பிரிந்து செல்ல வேண்டிய சமுதாயத் தேவைகள் இருக்கின்றன. அத்தகைய பிரிவுகளாக,

| | |
|---|---|
| கல்விப் பிரிவு | போர்ப் பிரிவு |
| தூதிற் பிரிவு | பொருள்வயிற் பிரிவு |

கூறப்பட்டுள்ளன. இவற்றில் பொருள் வயின் பிரிவு என்பது முக்கியமான ஒன்றாகும். இப்பிரிவு இல்லறத்தோடு தொடர்புடையது. ஏழ்மையிலிருந்து மீளவோ, இருக்கும் செல்வத்தைப் பெருக்கவோ, இல்லறக் கடமையைச் செய்யவோ பொருள்வயின் பிரிவினை மேற்கொள்கின்றனர்.

**தொழிற் சிறப்பு**

தன் குடும்பம் வளமோடு வாழவும், கடமைகளைச் செய்யவும் வேளாண்மை செய்து அப்பொருளினால் வளமாக வாழ்ந்த மக்களையும் பற்றிய குறிப்புகள் குறுந்தொகையில் காணப்படுகின்றன. வேளாண்மை செய்வதைத் தொல்காப்பியர்,

"வேளாண் மாந்தர்க் குழுதூ னல்ல

தில்லென மொழிப" (தொல்.மரபி.நூ.80)

என்றும் "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை" எனவும் சுட்டுகின்றது. இத்தகைய வேளாண்மைத் தொழிலையும் சங்ககால மக்கள் சிறப்போடு செய்து வளம் பெற்றிருந்தனர் என்பதை, குறுந்தொகைப் பாடல்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம். குறவன் ஒருமுறை விதைத்த தினையின் கதிர்களைப் பெற்றதாலும், மறுகாவில் விளையும் அவரைக் காய்களையும் பெற்றதாலும் மகிழ்ச்சி அடைந்ததை,

"பெரும்குனக் குறவன் சிறுதினை மறுகால்

கொழுங்கொடி அவரை பூக்கும்" (குறு.பா.82)

என்ற குறுந்தொகை பாடல் வரியின் மூலம் அறியலாம்.

**தலைவனின் கண்ணியம்**

தலைவன் பொருள்வயின் பிரிந்தவிடத்து தலைவியின் நினைவால் வினை முடியாது மீள்வனோ என்று தலைவி கலங்கியதை,

"நயந்தோர் புண்கன் தீர்க்கும்

பயன்தலைப் படா அப் பண்பினை எனினே" (குறு.பா 341)

என்ற வரிகளால் அறியலாம், தலைவியின் மனம் அவ்வாறு நினைத்தாலும் தலைவன் எண்ணியத்தை செய்யாது வீடு திரும்புவான் அல்லன் என்பதையும் அறிந்தவள் என்பதனாலேயே தலைவன் நெஞ்சம் கண்ணியம் உடையது என்கின்றார். இதன் மூலம் தலைவனின் தொழில் கண்ணியத்தை அறியமுடிகிறது.

**வீண் பொருட் செலவு**

பாடுபட்டுச் சேமித்தப் பொருட்களை நல்வழியில் பயன்படுத்த விரும்புவர். இருப்பினும் பல இடங்களில் வீணாகவும் செலவிடுவர். தலைவன் பரத்தையரின் இல்லம் செல்வதற்குத் தன்தேரினை அலங்காரம் செய்துகொண்டு சென்றான். தலைவன் தந்த செல்வத்தால் பரத்தையர்கள் பல அணிகலன்கள் செய்து அணிந்து கொண்டனர்.

"காலை எழுந்து கடுந்தேர் பண்ணி

வால் இழை மகளிர்த் தழீஇய சென்ற

மல்லன் ஊரன் எவ்வினன் பெரிது என்" (குறு.பா.45)

என்ற வரிகளில் தலைவன் பரத்தையருக்காகப் பொருளை வாரி இறைக்கும் செல்வவளம் கொண்டவன் என்பதும், தன் மகிழ்விற்காகவும், தன் தகுதியைக் காட்டவும், பொருளை வீண் படுத்தும் நிலையினையும் கண்டு தலைவி வருத்தம் கொள்வதைக் காண முடிகின்றது.

**பொருள் சேமித்தலில் தலைவி**

உழைத்து எடுத்து வரும் பொருளை வரவுக்கு மீறிச் செலவு செய்யாது, தேவைக் கேற்பப் பயன்படுத்திப் பொருளைச் சேமித்து, குடும்பத்தை நடத்தி வருவதில் தலைவியின் பங்கும் முக்கியமானதாகும். தலைவன் பொருள் தேடி வீடு வந்தால் அதனைப் பாதுகாத்து பயன்படுத்தும் தொடர் செயலைச் செய்பவள் தலைவியே. தலைவன் தலைவியை மணம் செய்து கொண்ட பின்னரே செல்வ வளம் நிறைந்த நிலையினை அடைந்தான். இதனை,

"யாய் ஆகியளே விழவு முதலாட்டி" (குறு.பா.10)

என்ற பாடல் வரியில் "விழவு முதலாட்டி" என்ற சொல் திருமணத்திற்குப் பின்னரே தலைவன் வளமுடையவனான் என்பதை குறிக்கின்றது.

**தன்னலமற்ற தலைவன்**

அனைவருக்கும் பயன்பட்டு வாழ்வதற்கு இன்றியமையாத பொருளைத் தேடுதலே சிறப்பான தொழில் என்பதனை,

"நம்மிலும் சிறந்த அரும் பொருள் தரற்கே" (குறு.பா.331)

என்ற பாடல் வரியில் தலைவனின் தன்னலமற்ற பொருள் தேடும் உயர்வான உள்ளத்தைக் காணமுடிகின்றது.

**பொருளின் பயன்பாடு**

ஒருவன் தான் ஈட்டி வந்த பொருளைப் பகுத்துண்டு வாழ்வதைத் தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும். உழைப்பால் வரும் செல்வத்தைப் போற்றிக் காப்பது ஒன்றே தன் கடமை எனவும், அதனைக் குறைப்பதற்கோ அழிப்பதற்கோ எவ்வகையிலும் தனக்கு உரிமை இல்லை எனவும் ஒருவன் அறிதல் வேண்டும். முன்னோர்கள் தேடித் சேமித்த பொருளைத் தனக்காகப் பயன்படுத்துவானாயின் அவன் இறந்தவனாகவே கருதப்படுவான். உழைப்பை அழித்து உயிர் வாழ்தல், இரந்து உண்டு வாழ்வதைவிட இழிவானதாகும். தலைவன் இவ்வாறு முயற்சியின் அருமையினையம், இரத்தலின் இளிவரலினையும் தலைவிக்கு உணர்த்துதலின் மூலம் பொருளின் பயன்பாட்டையும் பொருள் ஈட்டலின் தேவையினையும் அறிந்தவன் என்பதை,

"உள்ளது சிதைப்போர் உள்ளர் எனப்படாஅர்
இல்லேர் வாழ்க்கை இரவினும் இளிவுஎனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டி" (குறு.பா.283)

என்ற பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

**தலைவனின் வாழ்த்து**

தலைவன் பொருள் முற்றி வந்துவிடுகிறான். வீட்டில் அன்று பெரிய விருந்து நடக்கின்றது. தம்முடைய மகிழ்வினைப் பலரோடு விருந்துண்டு பங்கிட்டுக்கொள்கின்றான். அதுகாறும் வருத்தத்தால் விட்ட கண்ணீர் மாறித் தலைவிக்கு மெய்சிலிர்க்கும் வகையில் கண்ணீர் உண்டாகிறது. அவர்களின் வாழ்க்கையில் அறம் பொருளின் பங்களிப்பு குறைவின்றி நடைபெறுகிறது. தலைவன் தன்னுடைய உள்ள நிறைவால், உலகிற்கு வளம் தரும் மழையை,

"பெய்தின் வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு
இவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தா ணண்மலர் நாறம்" (குறு.பா.270)

என்ற பாடல் வரிகளில் வாழ்த்துகின்றான். தலைவன் கொணர்ந்த பொருளை உளமொத்த அன்பொடு தலைவனும் தலைவியும் விருந்தாற்றுகின்றனர். இவ்வாறு தன் இல்லத்தைப் பிரிந்து பொருள் தேடச் சென்று, தலைவன் கொணர்ந்த பொருளை மகிழ்வோடும், பொறுப்போடும் இல்லற நெறிக்காக இருவரும் செலவிட்டு மகிழ்ந்துள்ளனர். என்பதை குறுந்தொகை பாடல்களின் மூலமாக அறியமுடிகிறது.

**பயன்பட்ட நூல்கள்**

1. பாலசுப்பிரமணியன். கு.வே, குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
2. நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியர்.
   சைவ சித்தாந்த நூல் பதிப்பு கழகம், சென்னை,1963.
3. மாணிக்கம் வ.சுப, தமிழ்க்காதல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. திருக்குறள் சிறப்புரை, கற்பக விநாயகர் பப்ளிகேஷன், சிவகாசி.